**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**UTHUKULI**
**CC 89/2023**
**PW- 1**

பெயர் : ராமாத்தாள்
க/பெ : சின்ன ராமசாமி
தேதி : 13.03.2024
A1 absent. A2, A3 present.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது கடைக்கு முன்பு உள்ள சாலை போக்குவரத்து அதிகமுள்ள சாலை என்றால் சரிதான். நான் புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ இரு சக்கர வாகனத்தில் வந்த மூவரின் அங்க அடையாளங்கள் மற்றும் வயது பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் அந்த நபர்கள் வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை கூறியுள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் வாகனத்தின் பதிவு எண் இல்லை என்றால் சரிதான். நான் புகாரில் எந்த இடத்திலும் புகார் கொடுத்த தேதியை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்தின் அருகே இருந்த யாரும் உடனே காவல் நிலையத்திற்கு சம்பவம் பற்றி தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் உடனே எனது போன் மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன். அவ்வாறு நான் போன் மூலம் தகவல் கொடுத்த விவரத்தினை புகாரிலோ, போலீஸ் விசாரணையிலோ மற்றும் முதல் விசாரணையிலோ சொல்லாமல் தற்போது தான் சொல்கிறேன் என்றால் சரிதான். புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரிதான். புகாரை என் தம்பி மகன் அருண் மற்றும் எனது மருமகள் அர்ச்சனா சேர்ந்து எழுதினார்கள். அவர்கள் புகார் எழுதும்போது உடன் ஒரு காவல் உதவி ஆய்வாளர் இருந்தார் என்றாலும் அவர் சொல்ல சொல்ல எழுதினார்கள் என்றாலும் சரிதான்.

3. புகாரிலும் களவு போன செயினின் மாடல் பற்றி எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போதுமான வெளிச்சம் இருந்ததா என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் நின்ற நபர் எவ்வளவு அடி தூரத்தில் நின்று இருந்தார் என்று புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று நல்ல மழை என்றால் சரிதான். சம்பவ நடந்த உடனே காவல் நிலையத்தில் யாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் ஏற்கனவே எங்கள் வீட்டில் குடியிருந்த கணேஷ் என்ற போலீசாருக்கு சொன்னேன். கணேஷ் போலீசாரிடம் தகவல் சொல்லியது பற்றி போலீசாரிடம் விசாரணையின் போது கூறினேனா என்றால் கூறினேன்.

4. எந்த நம்பரில் மற்றும் எந்த நேரத்தில் கணேஷிடம் தகவல் தெரிவித்தேன் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் தற்போது தான் நீதிமன்றத்தில் இந்த விவரத்தை சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும், எனது கொழுந்தனர் செல்வமும் இரு சக்கர வாகனத்தில் அந்த நபர்களை துரத்தி சென்றோம். புலவர்பாளையத்திலுள்ள பெட்ரோல் பங்க்கில் கேமரா பதிவுகளைப் பார்த்தோம். அதில் தெரியவில்லை. பின்னர் போலீசார் வந்தவுடன் அருகே இருந்த பனியன் கடை கேமராக்களை பார்த்தோம், அதிலும் அந்த நபர்கள் முகம் தெரியவில்லை. பின்னர் நான் வீட்டிற்கு வந்து விட்டேன். பின்பு எனது வீட்டிலிருந்து ஒரு வீடு தள்ளி செந்திலின் வீடு உள்ளது. அவர் அவினாசியில் இருந்தார். அவரை வரச்சொல்லி அவரது வீட்டிலுள்ள கேமராக்களை நானும், எனது உறவினர்களும் பார்த்தோம். அதில் அந்த நபர்கள் வந்தது மற்றும் அனைத்து சம்பவங்களும் தெளிவாக இருந்தது. நான் அந்த விவரங்களை போலீசாரிடம் தெரிவித்தேன். நான் இந்த விவரங்களை புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ சொல்லாமல் தற்போது தான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் புகாரில் அவர்கள் என்ன எழுதினார்கள் என்று தெரியவில்லை.

5. செந்தில் வீடு மேற்கு பார்த்தவாறு உள்ளது. காவல் ஆய்வாளரின் மாதிரி வரைபடத்தில் செந்தில் வீடு கிழக்கு பார்த்தவாறு உள்ளது என்றால் எனது வீடும், செந்திலின் வீடும் மேற்கு பார்த்து தான் உள்ளது. சம்பவத்தின்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்று பெயரை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நகையின் மதிப்பை புகாரில் யார் சொன்னதின் பேரில் குறிப்பிட்டேன் என்றால் புகாரை படித்துப் பார்க்காமல் பிள்ளைகள் எழுதியதை நம்பி கையொப்பம் செய்து விட்டேன். எனக்கு புகாரில் உள்ள விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். புகாரில் உள்ள நகையின் மதிப்பை யார் சொன்னது என்று எனக்கு தெரியாது.

6. காவல் ஆய்வாளர் சம்பவத்தன்று இரவு 08.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார். அவர் வந்த உடன் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தார் என்றால் அச்சமயத்தில் புலவர்பாளையம் பெட்ரோல் பங்கிற்கு சென்று விட்டேன். காவல் ஆய்வாளர் என்னை பெட்ரோல் பங்கில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னை அப்போதே விசாரித்து எழுதிக் கொண்டார் என்றால் இல்லை, மறுநாள் காவல் நிலையம் வருமாறு சொன்னார். காவல் நிலையத்திற்கு நானும், ஆர்.எஸ். ராமசாமி, சதிஷ்குமார், அர்ச்சனா, அருண்குமார், ஸ்ரீதரன், ஈஸ்வரி, மதன்குமார், ஈஸ்வரன் மற்றும் பலரும் வந்தார்கள்.

7. நான் புகார் கொடுக்க சென்ற போது என்னுடன் எனது ஊரைச் சேர்ந்த செல்வராஜ், எனது மகன் பழனிச்சாமி ஆகியோரும் உடன் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களையும் அங்கே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுத்த அன்று மட்டும் தான் மேற்படி நபர்களை போலீசார் விசாரித்தனர் என்றாலும் அதற்கு பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான்.

8. போலீசார் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். சொன்ன நாள் மற்றும் சொன்ன நேரத்தில் எந்தவொரு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், காவல் ஆய்வாளர் எனக்கு சொன்னதின் பேரில் தான் 2ம் எதிரியை

எனக்கு தெரியும் என்றாலும், 2ம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. 3ம் எதிரிக்கும், இவ்வழக்கு சான்று பொருள்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு காவல் ஆய்வாளரால் புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்டது என்றாலும் சரியல்ல. போலீசார் சொன்னதின் பேரில் தான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. அந்த கேமராவில் அன்றைய தினம் நடந்த அனைத்தும் பதிவாகும் என்றால் சரிதான்.

**<u>1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. காவல் நிலையத்திற்கும், எனது கடைக்கும் சுமார் ஒன்றை கி.மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். செல்வராஜ் கேமராவை பார்த்து தான் வண்டி நம்பரை எனக்கு கூறினார் என்றாலும், வாகனத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரிதான். சம்பவ நடந்து 1 மணி நேரத்தில் அந்த வாகனத்தின் வண்டி நம்பர் தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு என்னுடன் புகார் கொடுக்க வந்தவர்களுக்கு எதிரிகள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான், நான் சொன்ன பின்பு தான் தெரியும். நாங்கள் அனைவரும் தற்போதும் பேசிக்கொண்டு தான் இருக்கிறோம் என்றால் சரிதான். எதிரிகளைப் பிடித்த உடன் அவர்களும் காவல் நிலையம் வந்து பார்த்தார்கள். காவல் நிலையத்தில் காட்டிய பின்பு தான் அருண்குமார், மதன்குமார், கணேசமூர்த்தி, சதிஷ்குமார், அர்ச்சனா, ஆர்.எஸ்.ராமசாமி ஆகியோர்களுக்கு எதிரிகளைத் தெரியும் என்றால் சரிதான்.

2. சம்பவத்தன்று இரவே சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்திய வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியும். அந்த விவரத்தை சேகருக்கு மற்றொருவர் சொல்லி தெரிந்து கொண்டார். சம்பவத்தின் போது சேகர் அங்கு இல்லை. அப்போதே வாகனத்தின் பதிவு எண் பற்றி காவல் நிலையத்திற்கும் தகவல் சொல்லி விட்டேன் என்றால் சரிதான். சாட்சிகள் ஈஸ்வரி, செல்வராஜ் ஆகியோர் என்னிடம் விசாரித்து சம்பவம் பற்றி தெரிந்து கொண்டனர் என்றால் சரிதான். செல்வராஜிற்கு சம்பவ சமயத்தில் வாகனத்தில்

பதிவெண் தெரியாது. கேமராவை பார்த்தது மூலமாகதான் செலவராஜ்க்கு வண்டி நம்பர் தெரியும் என்றால் சரிதான்.

3. நான் 26.11.2022ம் தேதி காவல் நிலையம் சென்றபோது எதிரிகள் மூவரும் அங்கு இருந்தார்கள் என்றால் இல்லை, ஆஜர் எதிரிகள் இருவரும் தான் அங்கு இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் என்னிடம் செயினை பறிக்கவில்லை. ஆஜர் எதிரிகள் இருவரும் மற்றும் எதிரி ஜெயராஜும் அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கும், இரவு 07.30 – 07.45 க்கும் வந்தார்கள். 3வது முறை வரும்போது தான் சம்பவம் நடந்தது. அப்போது நீதிமன்றத்தில் சட்டை அணிந்துள்ள எதிரி (வேலுதுரை) வரவில்லை. தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள மற்றொரு எதிரி வண்டியில் நின்றுகொண்டிருந்தார். 1ம் எதிரி ஜெயராஜ்தான் என்னிடம் செயினை பறித்தார். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் போலீசார் கேட்டதின் பேரில் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி :</u>** மேற்படி செந்தில் வீட்டில் இருந்த கேமரா பதிவுகளை நீங்கள் பார்த்து பற்றி போலீசாருக்கு தகவல் சொன்னீர்களா?

**<u>பதில்</u>** : நான் போலீசாரிடம் சொல்லவில்லை. ஆனால் என்னுடன் இருந்த அனைவரும் அந்த பதிவுகளை பார்த்தார்கள். அதில் முகம் ஓரளவுக்கு தெரிந்தது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.03.13 20:32:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.